பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 11 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. அரசியல் சாசன கோட்பாடுகளை கடைபிடிப்பதை மக்கள் தங்களது அடிப்படை கடமையாகக் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
2. சமூக நீதியை உறுதி செய்து மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
3. மாநிலங்களவையில் காலியாக உள்ள ஆறு இடங்களுக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 20-ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
4. தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து புயலாக வலுப்பெறக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டி மஸ்கட்டில் இன்று தொடங்கியது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

அரசியல் சாசனத்தை பின்பற்றுவதை மக்கள் தங்களது அடிப்படை கடமையாக ஏற்று செயல்பட வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் சாசன தினத்தையொட்டி நாடாளுமன்ற மைய மண்டபத்தில் இன்று காலை நடைபெற்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு அயராது பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

உள்ளார்ந்த வளர்ச்சியையும், சமூக நீதியையும் நிலை நாட்டுவதற்கான உயிரோட்டம் உள்ள ஆவணமாக அரசியல் சாசனம் திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் சாசனத்தின் பயன்களை மக்கள் பெறுவதற்கு ஏதுவாக அரசு நிர்வாகம், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள், நீதித்துறை ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென்று குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

மக்களுக்கான பல திட்டங்களை அண்மையில் அரசு கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்த அவர், பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களையும் எடுத்துரைத்தார்.

ஏழை எளிய மக்களுக்கு வீட்டுவசதி அளிக்கப்படுவதாக அவர் தெரிவத்தார்.

உலகத் தரத்திலான உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் நாடு வளர்ச்சிப்பாதையில் விரைந்து முன்னேறிச் செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் மகளிருக்கு இடஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கான சட்டம் அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்துள்ளதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

இந்த கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், அரசியல் சாசனத்தின் 75-வது ஆண்டு விழா நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க மைல் கல்லாக விளங்குகிறது என்று கூறினார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக திகழும் இந்தியா விரைவான பொருளாதார வளர்ச்சி, உள்கட்டமைப்பு மேம்பாடு, மின்னணு கட்டமைப்பு ஆகியவற்றில் சாதனை படைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா உரையாற்றுகையில், நாட்டு மக்களின் பெருமையையும், தியாகத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அரசியல் சாசனம் அமைந்துள்ளதாகக் கூறினார்.

மூன்று ஆண்டு காலத்திற்கு மேல் அரும்பாடு பட்டு அரசியல் சாசனத்தை நமது தலைவர்கள் உருவாக்கித் தந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சமூக பொருளாதார மாற்றத்திற்கான கருவியாக அரசியல் சாசனம் உள்ளது என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் உள்ள மக்களுடன் இணைந்து அரசியல் சாசன விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டுமென்றும் திரு ஓம் பிர்லா கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள், மக்களவை மற்றும் மாநிலங்களை எதிர்க்கட்சி தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அரசியல் சாசன தினத்தையொட்டி அனைத்து மாநிலங்கள் மற்றம் யூனியன் பிரதேசங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அரசியல் சாசன முகப்புரை வாசிக்கப்பட்டு உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு உறுதிமொழி செய்து வைத்தார்.

**[]<<<>>>[]**

இந்திய அரசியல் சாசனம் நீதி சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசன தினத்தையொட்டி இன்று மாலை புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், நமது அரசியல் சாசனம் நமக்கு வழிகாட்டியாக திகழ்வதாகக் குறிப்பிட்டார்.

மக்களுக்கு விரைந்து நீதி கிடைக்க வேண்டும் என்ற முயற்சியின் பயனாக நீதித்துறைக்கான புதிய நடைமுறைக் சட்டம் கொண்டுவரப்பட்டதாக அவர் கூறினார்.

சமூக நீதியின் அடித்தளமாக அரசியல் சாசனம் திகழ்கிறது என்று குறிப்பிட்ட பிரதமர், மக்களுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் 53 கோடிக்கும் மேற்பட்டோர் வங்கிக் கணக்குகளை தொடங்கி இருப்பதாகவும், நான்கு கோடிக்கும் கூடுதலான மக்களுக்கு கான்கிரிட் வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளதாகவும் இதனால் சமூக நீதி நிலைநாட்டப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதில் அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்படுவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மாநிலங்களவையில் காலியாக உள்ள ஆறு இடங்களுக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 20-ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஆந்திரபிரதேசத்தில் மூன்று இடங்கள், ஒடிஸா, மேற்குவங்கம், ஹரியானா ஆகிய மாநிலங்களில் தலா ஒரு இடத்திற்கு நடைபெறவுள்ள இந்த இடைத்தேர்தலுக்கான அறிவிக்கை அடுத்த மாதம் மூன்றாம் தேதி வெளியிடப்பட்டு வேட்புமனு தாக்கல் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் பத்தாம் தேதி வரை மனுக்களை தாக்கல் செய்யலாம் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

நிலக்கரி சுரங்கும் அமைக்கும் பகுதிகளில் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் குறித்த நிலக்கரி சட்டத்திருத்த மசோதா குறித்த பொதுமக்களின் கருத்துக்களை நிலக்கரித்துறை அமைச்சகம் கோரியுள்ளது.

நிலக்கரி சுரங்கம் அமையவுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்களது கருத்துக்களை அமைச்சகத்தின் இணையதளமான **coal.nic.in** என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மூன்றாவது உலக ஊடக மாநாடு துபாய் தலைநகர் அபுதாபியில் இன்று தொடங்கியது.

சர்வதேச அளவில் ஊடகத்துறையில் பணியாற்றி வருபவர்கள், ஊடக நிபுணர்கள், நவீன சிந்தனையாளர்கள் மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

ஊடகத்துறையை மேம்படுத்துவது குறித்தும், புதிய வாய்ப்புகளை உருவாக்குவது குறித்தும் இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

எதிர்கால ஊகத்தை வடிவமைப்பது என்ற தலைப்பிலான அமர்வில் புதிய செயல்திட்டங்கள் குறிதது விவாதங்கள் நடைபெறவுள்ளன.

இம்மாநாட்டில் ஊடகத்துறை தொடர்பான புத்தாக்க தொழில்கள் குறித்தும், ஊடகத்துறையின் சவால்களை எதிர்கொள்வதற்கான புதிய முயற்சிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்தும் எடுத்துரைக்கும் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழிழ்நுட்பத்தை செய்தித்துறையில் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளன.

**[]<<<>>>[]**

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை புயலாக வலுப்பெறக்கூடும் என்றும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) ---20 செகண்ட்*

இதன் காரணமாக நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்ளிலும், வட மாவட்டங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) ---60 – செகண்ட்*

இதனிடையே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று கனமழை பெய்துள்ளது.

மழை காரணமாக கடலூர், மயிலாடுதுறை, மாவட்டத்தில் பள்ளிக் கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டி மஸ்கட்டில் இன்று தொடங்கியது.

இதில் இந்தியா, ஜப்பான், கொரியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டி லக்னோவில் இன்று தொடங்கியது.

இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் கபூர் - ருத்விகா ஷிவானி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

இதேபிரிவில் தனிஷா கிராஸ்டோ — துருவ் கபிலா இணை, சுமித்ரெட்டி - ஷிக்கிரெட்டி இணை, தீப் ரம்பையா — சிம்ரன் சிங்கி, சயாநித் ஜோஷி — காவியா குப்தா இணைகளும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது,

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் தமிழகம் - உத்திரபிரதேசத்தையும், தில்லி - பட்னா அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**